Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 03 July-September 2024

# அவனுக்கு பெயர் என்ன ?

**ம. சிபிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் துறை,
எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் பொறியியல் கல்லூரி,
சென்னிமலை, ஈரோடு – 638 112.

ஆய்வுச் சுருக்கம் :

பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை தமிழர்களுடைய ஒழுக்க நெறிகளைப் போற்றி பாதுகாத்து வருகிறார்கள். அவ்வழியில் மாதவியின் கற்பு நிலையை நாம் பார்க்கையில் சற்று கர்வம் கொள்ளலாம். குலத்தில் ஒன்றுமில்லை, குணத்தில் அனைத்தும் உள்ளது என்பதனை நிரூபித்து விட்டால் கணிகைக் குலத்து கண்ணகியாய், கடவுளிலிருந்து சாமானிய மக்கள் வரை ஒழுக்கத்தைக் கடைபிடிக்கின்றனர். இவ்வொழுக்கத்தைப் பற்றியும், பெண்களின் நிலையைப் பற்றியும் இவ்வாய்வில் கூறப்பட்டுள்ளன.

முன்னுரை :

காலங்காலமாய் ஆண்களின் ஒழுக்கம் எங்கும் பேசப்படுவதும் இல்லை, விவாதிக்கப்படுவதும் இல்லை. அவர்கள் குடும்பம், வளர்ந்த விதம், நடத்தை போன்றவற்றைப் பற்றியும் கூறப்படுவதுவுமில்லை. ஆனால் பெண்களின் ஒழுக்கம் இன்று வரை பேசும் பொருளாகவே இருக்கிறது. அவளுடைய கற்பை பரிசோதிக்கவும் படுகிறது. அது கடவுளாக இருந்தாலும் சரி, மனிதனாகவும் இருந்தாலும் சரி. இதனைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகப் காண்போம். ஒழுக்கம் :

ஒழுக்கம் என்பது உரிய முறையில் நடந்து கொள்வதாகும். இதனை திருவள்ளுவர் தன் குறளில்,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

திருவள்ளுவரின் கருத்துப்படி, ஆண் என்றாலும், பெண் என்றாலும் தன்னுடைய ஒழுக்க நிலையை உயிரினும் மேலாய் காக்க வேண்டும் என்பதாகும்.

தனிமனித ஒழுக்கம் :

எந்த தனிமனிதன் நடத்தையால் உலகம் துன்புறுவதில்லையோ, மகிழ்கிறதோ அதனையே தனிமனித ஒழுக்கம் என்று கூறப்படுகிறது.

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென என எதிர்பார்க்கிறானோ அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கம் ஆகும் என்கிறார் பெரியார்.

கணிகையர் குலம் :

கற்பு என்பதனை தொல்காப்பியத்தில் கூறுகையில் திருமணத்திற்கு முன்னர் வாழும் வாழ்க்கையை களவு என்றும், திருமணத்திற்குப் பின்னர் வாழும் வாழ்க்கையை கற்பு என்றும் வரையறுக்கிறார் தொல்காப்பியர். களவையும், கற்பையும் ‘‘கைக்கோள்’’ என்பார். இத்தொடரில் கை என்பது கைப்பற்றி வாழும் ஒழுக்கத்தைக் குறிக்கும்.

பரத்தையர் என்பவர் ஆடலிலும், பாடலிலும் வல்லவராகி அழகும் இளமையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்பி ஒருவரிடம் செல்லும் பெண்களாவார். இவர்கள் ஒருவரிடத்து தங்காத் தன்மை உடையவர்கள். இவரையே கணிகையர் என்றும் கூறுவர். இதில் ஏன் ஆணைக் குறிப்பிடவில்லை. ஆண்களிலும் இதுபோல் இருப்பவர்களுக்கு இச்சமூகம் என்ன பெயர் வைத்தது ?

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் :

பத்தினி என்பவள் யார் ?

பத்தினி எனப்படுவது கணவன் அவளின் கழுத்தில் தாலி கட்டிய ஒரே காரணத்திற்காக அவருக்கே அடிபணிந்து பணிவிடைகள் நிறைய செய்து அவற்றிற்கு உபகரமாக எந்தவொரு பிரதிபலனையும் அவரிடமிருந்து எதிர்பார்க்காது அவருக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணிக்கும் திருமணம் ஆன பெண்ணைக் குறிக்கும் சொல்லாகும்.

(எ.கா.)

யானு மோர் பத்தினியே
யாமாகில் (சிலப் 21, 36 – 7)

‘‘மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்’’ என்பது கண்ணகி தாலி அணிந்ததை இளங்கோவடிகள் உறுதி செய்கிறார். சங்க காலத்திலிருந்தே ஒருவனுக்கு ஒருத்தி என்ற நடைமுறை இருந்ததா ? அப்படியானால் தாலி அல்லது மாங்கல்யம் கட்டும் வழக்கம் அப்போது இருந்ததா ?

சங்க கால வழக்கை ஒட்டியே ஆண்டாளது நோன்பு வழிபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுனையாடுதல், சிற்றில் விளையாட்டு, கனவுரைத்தல், கூடலிழைத்தல், தூதுவிடுதல் இதிலெல்லாம் ஒருவனுக்கு ஒருத்தி என்னும்

தத்துவமே தென்படுகிறது. ஆண்டாள் கடைசிவரை அரங்கனைத்தவிர வேறு ஒருவன் என்ற பேச்சுக்கே இடமில்லையென ஆணித்தரமாக மறுத்து விடுகிறாள்.

கனவுரைத்தலின் திருமண சடங்குகளை விவரிக்கும் போது அந்தணர்கள் கூடி மந்திரங்கள் ஓதியதையும், மணமாலை சூட்டுவதையும், காப்பு நாண் கட்டுவதையும் மங்கல நீராட்டி, யானைமேல் ஊர்வலம் வந்து திருஷ்டி கழிப்பதையும் கூறினாள். அம்மி மிதித்தலையும் அரிமுகம் அச்சுதன் கைமேல் என் கை வைத்தலையும், மத்தலம் கொட்டி கைத்தலம் பற்றியதைத்தான் பேசுகிறாளேலொழிய தாலி கட்டியதாய் எங்குமே கூறவில்லை.

## அவனுக்குப் பெயர் என்ன ?

சடங்கும் சம்பிரதாயமும் பெண்களுக்கு என்றால் ஆண்களுக்கு ஏன் எதுவும் கூறவில்லை. கற்பு என்பது இருபாலருக்கும் உரியது தானே. கோவலன் மாதவியிடம் சென்றதும் மாதவியை விட்டு கண்ணகியிடம் வந்ததும் தவறு என்று இச்சமூகம் கோவலனைப் பேசுகிறதா ? இல்லை ? ஏனென்றால் அவன் ஆண் மகன்.

கண்ணகிக்கு கோவலன் ஊர் அறியும் படி தாலி கட்டினான் என்று கூறும் சிலப்பதிகாரம் தான், மாதவியிடம் கோவலன் ஊர் அறியும் வண்ணம் வாழ்ந்தான் என்பதனையும், அதற்கு சான்றாக ஒரு மகளையும் விட்டுச் சென்றிருக்கிறான் என்பதையும் சிலப்பதிகாரம் தான் கூறுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பது போல் ஒருத்திக்கு ஒருவன் என்பது கிடையாதா ?

ஒரு திங்கள் இராவணனின் நிழலில் இருந்ததற்கே சீதையை தீயில் இறக்கி விட்டு வேடிக்கை பார்த்தவர்கள். ஆனால், கோவலன் பல திங்கள் மாதவியின் மடியில் கிடந்தான் அவனை மட்டும் ஏன் தீயில் இறங்கச் சொல்லவில்லை. ஆணை குறை கூற விரும்பவில்லை, பெண்ணை குறை கூற வேண்டாமென்றே கூற விரும்புகிறேன்.

## முடிவுரை :

அன்றிலிருந்து இன்றுவரை பெணகள் யாரோ ஒருவருக்கே அடிமையாக்கப்பட்டு வருகிறார்கள். ஆண்களின் வேலை பணம் சம்பாதிப்பதாகவும், பெண்ணின் வேலை ஆண்களுக்கு பணிவிடை செய்வதாக இருக்கிறது. பெண் சுதந்திரம் என்பது ஆண் சுதந்திரத்தில் அடங்கி விடுகிறது. ஒழுக்கம் என்பது இருபாலருக்கும் என்பதனை இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

புார்வை நூல் :

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

சிலப்பதிகாரம்

பெரியாரின் பெண்ணியம்

கீற்று.